## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 178/2017

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 21.11.2025 | | |
|---|---|---|---|
| பெயர்: | தெட்சிணாமூர்த்தி (DW–2 Cross ) | தகப்பனார் பெயர்: | வெங்கடாசலம் |
| கிராமம்: | சட்டநாதபுரம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 64/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 21.11.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்–11.30)**

1. இந்த வழக்கில் நான் சாட்சியமளிக்க என்னை அழைத்து வந்தது 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதி வசிக்கும் கிராமத்தில் முன்பு ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன் என்றால் சரிதான். சுந்தரமூர்த்தி எழுதி வைத்த உயிலில் நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். வெங்கட்ராமன் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்யப்பட்டது. 2வதாக சாட்சி கையொப்பம் செய்தவர் 1ம் பிரதிவாதியின் மகள் 4ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

2. தாவா சொத்து சுந்தரமூர்த்திக்கு எப்படி கிடைத்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. சுந்தரமூர்த்தி எழுதி வைத்த பி.வா.சா.ஆ.13 தான் கடைசி உயிலா அல்லது வேறு ஏதேனும் உயில் உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. சுந்தரமூர்த்தி உயில் எழுதும் காலத்தல் சுமார் 80 வயதுக்கு மேல் இருக்கும். அதனால் அவர் தள்ளாடும் நிலையில் இருந்தாரா என்றால் இல்லை, நல்ல திடகாத்திரமாக தான் இருந்தார். உயில் எழுதப்பட்டது என்பது 100 ரூபாய் பத்திரம் மற்றும் 2 தனித்தாளில் எழுதப்பட்டது.

3. சுந்தரமூர்த்திக்கு பானுமதி, சிங்காரவேல் தவிர மற்ற வாரிசுகள் உள்ளனரா

என்ற விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சுந்தரமூர்த்தி உயில் எழுத சட்டநாதபுரத்தில் இருந்து என்னை அழைத்து வந்தாரா என்றால் சுந்தரமூர்த்தி சீர்காழியில் இருந்தார், ஆட்டோ மூலமாக என்னை அழைத்து வந்தார். சுந்தரமூர்த்தி நல்ல திடகாத்திரமான நிலையில் இல்லை என்றாலும், அவர் 1ம் பிரதிவாதி பானுமதி வீட்டில் தங்கியிருந்ததை சாதகமாக எடுத்து கொண்டு 1ம் பிரதிவாதியும் நானும் கூட்டு சேர்ந்து போலியாக இந்த உயிலை தயார் செய்தோம் என்றாலும் சரியல்ல.

4. ஏற்கனவே தாவா சொத்துக்களை பொறுத்து சுந்தரமூர்த்தி வாதிகளுக்கு உயில் எழுதி வைத்துள்ள விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுந்தரமூர்த்திக்கு சிங்காரவேலுவிற்கு உயில் எழுதிவைக்கும் எண்ணம் கிடையாது, நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கட்டாயப்படுத்தி அவரை உயில் எழுதவைத்தோம் என்றால் சரியல்ல. சிங்காரவேலுவிற்கு தான் தாவா சொத்து சொந்தமானது, வேறு யாருக்கும் எந்த பாகமும் கிடைக்கக்கூடியதல்ல என்று நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சுந்தரமூர்த்தி சொன்னதை வைத்து கூறுகிறேன், ஆனால் ஆவணங்கள் பார்த்ததில்லை.

5. நான் சட்டநாதபுரம் ஊராட்சி மன்ற தலைவராக இருந்த காரணத்தால் எனது தெருவாசிக்கு சாதகம் செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யான உயிலை ஏற்படுத்தி அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில் எழுதும் காலத்தில் சுந்தரமூர்த்தி திடகாத்திரமாக இல்லை, ஆனால் நான் வழக்கிற்காக திடகாத்திரமாக இருந்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**</u>

<u>**மறு விசாரணை இல்லை.**</u>

**(முடிவு நேரம்– 11.43)**